பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 24 சனிக்கிழமை 09.07.2022 கதிர் 136

## கடும் எதிர்ப்புக்களையடுத்து 'பொலிஸ் ஊரடங்கு' நீக்கம்!

பல தரப்புக்களிடமிருந்தும் வந்த கடும் எதிர்ப்புக்களையடுத்து பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தைப் பொலிஸ்மா அதிபர் நீக்கியுள்ளார்.

மேல் மாகாணத்தில் சில பொலிஸ் பிரிவுகளில் நேற்றிரவு 9 மணி முதல் அமுல்படுத்தப் பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 8 மணியுடன் தளர்த்தப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் 2

## போராட்டக்களமாக மாறியது தலைநகர்
# ஜனாதிபதி மாளிகை மக்களின் கட்டுக்குள்
### அரச படைகளின் தடைகள் தகர்ப்பு





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிரான மாபெரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் 2



## ஜனாதிபதி செயலகமும் போராட்டக்காரர்கள் வசம்

மாபெரும் மக்கள் தன்னெழுச்சிப் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி மாளிகையை இன்று கைப்பற்றிய ஆர்ப்பாட்டக்காரர்கள், காலிமுகத்திடலில் அமைந்திருக்கும் ஜனாதிபதி செயலகத்தையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 2

## 41 பேர் காயம்!
### -மூவரின் நிலை கவலைக்கிடம்





ஜனாதிபதி மாளிகைக்கு முன் இன்று நடைபெற்ற போராட்டத்தின் போது ஏற்பட்ட அமைதியின்மையால் 41 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் 2

## துறைமுகம், விமான நிலையம் ஊடாக தப்பிச் சென்ற முக்கியஸ்தர்கள் யார்?

கொழும்புத் துறைமுகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாகப் பிரமுகர்கள் சிலர் பயணித்திருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 2




## கோட்டா தப்பியோட்டம்

கொழும்பு, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தப்பிச் சென்றுள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்று பாதுகாப்புத் தரப்பினரை மேற் கோள் காட்டி இந்தச் 2

## எதிர்க்கட்சித் தலைவர் வைத்தியசாலையில்!



எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் 2

## உடனே பதவி விலகுங்கள்!
### – கோட்டாவுக்கு 'மொட்டு' எம்.பிக்கள் அவசர கடிதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும் - என்று ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

டலஸ் அழகப்பெரும, சன்ன ஜயசுமன, நாலக கொடஹேவா உள்ளிட்ட 19 எம்.பிக்கள் இவ்வாறு கோரிக்கை விடுக்கும் அவசர கடிதத்தை 2



## ஜனாதிபதி பதவி விலக வேண்டும்
### - கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வலியுறுத்து

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. 2



## கட்சித் தலைவர்களின் முடிவுக்கு மதிப்பளித்துச் செயற்படத் தயார்
### ரணிலுக்குக் கோட்டா அறிவிப்பு

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்துக்கும் மதிப்பளிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்துள்ளார்.

இதனைப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் கலந்துரையாடி விரைவான தீர்மானத்தை எடுப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு



விடுத்திருந்தார். அத்துடன் நாடாளுமன்றத் தைக் கூட்டுமாறு, அவர் சபா நாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

கோட்டாபயவுக்கு எதிராக போராட்டம் நடத்தி வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகைக்குள் 2

## அலரி மாளிகைக்குள்ளும் ஆர்ப்பாட்டக்காரர் நுழைவு

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக் குள்ளும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இன்று மாலை நுழைந்துள்ளனர். ஏற்கனவே ஆர்ப்பாட்டக்காரர்கள், ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றிலும் உட்பிரவேசித்துள்ளனர்.

எனினும், அவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குள் சென்றபோது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அங்கிருக்கவில்லை.

அவர் நேற்று இரவே அங்கிருந்து வெளியேறி விட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன

## பிரதமர் பதவியை துறக்க நான் தயார்
### ரணில் அறிவிப்பு



பிரதமர் பதவியிலிருந்து விலகி சர்வகட்சி அரசு ஒன்று பொறுப்பேற்பதற்கான வழிவகைகளைச் செய்யத் தயார் எனப் பிரதமர் ரணில் 2

## ஜனாதிபதி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று உக்கிரமடைந்து பெரும் திரளானோர் ஜனாதிபதி மாளிகைக்குள் பிரவேசித்து அந்தப் பகுதியைத் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

கொழும்பில் அரச படைகளின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில், மக்கள் திரண்டு வந்து பாதுகாப்பு வேலிகளைக் கடந்து சென்றனர்.

ஆரம்பத்தில் போராட்டக்காரர்களைத் தடுக்கப் பாதுகாப்புத் தரப்பினர் பல சந்தர்ப்பங்களில் கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு, நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

எனினும், சகல தடைகளையும் கடந்து மக்கள், 'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற கோத்துடன் ஜனாதிபதி மாளிகை வளாகத்தை முற்றுகையிட்டு அதனைத் தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஜனாதிபதி மாளிகை அருகில் இருந்த பொலிஸாரின் தண்ணீர்ப் பீய்ச்சியடிக்கும் இரு வாகனங்களைக் கைப்பற்றிய போராட்டக்காரர்கள், அதனைப் பயன்படுத்திப் பாதுகாப்புத் தரப்பினர் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

நேற்றிரவு 9 மணியளவில் கொழும்பு உட்பட மேல் மாகாணத்தின் முக்கிய பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், இன்று காலை 8 மணியுடன் பொலிஸ் ஊரடங்கு நீக்கப்பட்டது எனப் பொலிஸ்மா அதிபரின் கையொப்பத்துடன் அறிவித்தல் விடுக்கப்பட்டது.

எவ்வாறாயினும், நேற்றிரவே கண்டி, அநுராதபுரம் மற்றும் மாத்தறை உள்ளிட்ட மாவட்டங்களின் மக்கள் ரயில் நிலையங்களை முற்றுகையிட்டு கொழும்புக்கான ரயிலை இயக்குமாறு கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

பெரும் திரளான மக்களின் வலியுறுத்தலுக்கு மத்தியில், ரயில் நிலைய அதிபர்கள் ரயிலை இயக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர்.

இதையடுத்து கண்டி, மாத்தறை, அநுராதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து இன்று காலை கொழும்பு நோக்கி போராட்டக்காரர்களுடன் ரயில்கள் வந்தன.

இதேவேளை, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கொழும்பை நோக்கி வாகனங்களிலும் கால்நடையாகவும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் படையெடுத்து வந்தனர்.

தலைநகர் இன்று காலை முதல் போராட்டக்களமாக மாறியது. பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள், ஆசிரியர் சமூகத்தினர், அரச உத்தியோகத்தர்கள், தொழிற்சங்கத்தினர், அரசியல்வாதிகள், சிவில் சமூகத்தினர், சட்டத்தரணிகள் மற்றும் பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் திரண்டு இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

ஜனாதிபதி மாளிகையை நெருங்க விடாது பன்மடங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் போராட்டக்காரர்கள் அனைத்துப் பாதுகாப்புத் தடைகளையும் கடந்து ஜனாதிபதி மாளிகையை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அவர்கள், ஜனாதிபதி உள்ளிட்ட அரசைப் பதவி விலகுமாறு கோரி தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஜனாதிபதி மாளிகைக்குள் முன்னெடுத்து வருகின்றனர்.

## துறைமுகம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி கொழும்புத் துறை முகத்திலிருந்து கடற்படைக்குச் சொந்தமான சித்துரல மற்றும் கஜபாகு ஆகிய கப்பல்கள் அங்கிருந்து சில பிரமுகர்களுடன் சென்றுள்ளனர்.

எனினும், குறித்த கப்பல்களில் சென்றது யார் என்பது தனக்குத் தெரியாது எனத் துறைமுக அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லும் அதிவேகப் பாதையில் இரண்டு அதிசொகுசு வாகனங்களும் டிபன்டர் பாதுகாப்பு வாகனங்களும் சென்றமை தொடர்பான வீடியோக்கள் வெளியாகி இருக்கின்றன.

இந்த வாகனங்களில் சென்ற பிரபுக்கள் யார் என்பது குறித்து இது வரையில் அறியப்படவில்லை. அதே போன்று கொழும்புத் துறைமுகத்தில் இருந்து கப்பல்களில் சென்றவர்களின் பெயர் விபரங்களும் இதுவரை வெளியாகவில்லை.

## உடனே பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கு மின்னஞ்சலில் அனுப்பிவைத்துள்ளனர்.

புதிய இடைக்கால அரசை அமைக்க ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சித் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாஸ வைரஸ் காய்ச்சல் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத் தும பண்டார இதை உறுதிப் படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரி இன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியை வழிநடத்தவிருந்த இவர் காய்ச்சலால் பாதிக்கப் பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## 41 பேர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகையை இன்று காலை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுவீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதமும் மோதலும் இடம்பெற்றது. இவ்வாறான நிலையில் 41 பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவர் பொலிஸ் அதிகாரிகளாவர்.

காயமடைந்த 41 பேரில் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கின்றது எனக் கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கோட்டா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகை ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகையிடப்படுவதற்கு முன்னர் அங்கிருந்து ஜனாதிபதி தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

## பிரதமர் பதவியை.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் எரி பொருள் விநியோகம் இந்த வாரம் மீள ஆரம்பிக்கப்பட வுள்ளதாலும், உலக உணவுத் திட்டப் பணிப்பாளர் இந்த வாரம் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாலும், சர்வதேச நாணய நிதியத்துக்கான கடன் நிலைத் தன்மை அறிக்கை வரவுள்ள தாலும் இந்த முடிவை எடுத்துள் ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், எதிர்க்கட்சித் தலைவர்களின் சர்வகட்சி அரசுப் பரிந்துரையைத்தாம் ஏற்றுக்கொள்வதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கடும் எதிர்ப்பு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சி.டி. விக்கிரமரத்ன அறிவித்துள்ளார். கொழும்பு வடக்கு, கொழும்பு தெற்கு, கொழும்பு மத்தி, நுகேகொடை, கல்கிஸை, களனி, நீர்கொழும்பு ஆகிய பொலிஸ் பிரிவுகளில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## கட்சித் தலைவர்.......

பிரவேசித்த நிலையிலேயே பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகியிருந்தது. எனினும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய் துள்ள அவசர கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசஸ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கை. எனவே, தற்போதைய நெருக்கடி நிலையில் இருந்து மீண்டுவர வேண்டுமாயின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதி பதவி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் அனைவரும் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமான ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தைப் பொதுமக்கள் முற்றுகையிட்டதை அடுத்து சபாநாயகர் நேற்று மாலை கட்சித்தலைவர்களின் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.


விளம்பரத் தொடர்புக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்கள் எழுச்சி

**கோட்டாபய ராஜபக்ஷவின் முரட்டுத்தனமான – முட்டாள்தனமான – எதேச்சாதிகாரமான – புத்தி சாதுரியமற்ற – தீர்க்கதரிசனமே இல்லாத – அரசுத் தலைமை மக்களிடத்தில் சரியான பாடத்தை இப்போது தான் புதிய முறையில் சந்தித்திருக்கின்றது.**

**ஜனாதிபதி தேர்தலில் 69 லட்சம் வாக்குகள் என்பதும், நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆசனத்துடன் வெற்றி என்பதும் மிகப்பெரிய இமாலய சாதனைகள்தான்.**

**ஆனால் அதிலும் விட மிகப்பெரிய எதிர்ப்பை இந்த இரண்டரை ஆண்டுகளுக்குள் சம்பாதித்துக் கொண்டு விட்டார் கோட்டாபய ராஜபக்ஷ என்ற உண்மையைத்தான் இப்போது கட்டவிழும் சம்பவங்கள் எடுத்துரைக்கின்றன.**

**ஓர் அரசை மக்கள் எழுச்சி மூலம் வீட்டுக்கு அனுப்புவது என்றால் – விரட்டி அடிப்பது என்றால் – மக்கள் எத்தகைய ரீதியில் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டுமோ அதற்கு முன்மாதிரியான நிகழ்வுகள் இப்போது இடம் பெறுகின்றன.**

**மக்களின் கருத்தியலை – எண்ணவோட்டத்தை – புரிந்து கொள்ளாமல் பதவியிலும் அதிகாரத்திலும் நீடிப்பேன் என்று பிடிவாதம் பிடித்த ராஜபக்ஷக்கள் இப்போது ஓடித்தப்ப வேண்டிய இக்கட்டுக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றனர்.**

**கௌரவமாக, ஒரு காலக்கெடு குறித்து, பரஸ்பரம் புரிந்துணர்வுடன், தேவைப்படுமாயின் ஒரு தேர்தல் மூலம், அதிகாரம் மாற்றத்தை முன்னெடுப்பதற்கு வழி இருந்த போதும், அவற்றுக்கு எல்லாம் இடமளிக்காமல், திமிர்த் தனத்துடன் அதிகாரத்தைக் கையாண்டமையால் நேர்ந்த விபரீதம் இது.**

**ஜனாதிபதியின் ஆட்சி அதிகாரம் ஒரு கணத்தில் கேள்விக்குறியாகிவிட்டது.**

**ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ மாளிகை, அவரைப் பதவி விலகக் கோரி போராட்டம் நடத்தும் பொது மக்களால் கைப்பற்றப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி செயலகமும் அத்தகைய இக்கட்டுக்குள் சிக்கி இருக்கின்றது.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எங்கே என்பது பற்றிய தெளிவான தகவல்கள் இல்லை. அவர் அதிகாரம் செலுத்து நிலையில் இருக்கின்றாரா அல்லது பாதுகாப்புக்கு எங்கேயும் பதுங்கி இருக்கின்றாரா என்பதும் இன்று நண்பகலில் கேள்விக்குறியாக இருந்தது.**

**இனிமேல் ஜனாதிபதியாக அவர் ஆட்சி அதிகாரம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. இன்று நண்பகலுடன் அது பெரும்பாலும் கருகிவிட்டது என்றே தகவல்கள் வெளியாகின.**

**மே 9ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து இறங்கினார். ஜூன் 9ஆம் திகதி பஸில் ராஜபக்ஷ எம்.பி. பதவியைத் துறந்தார். இன்று ஜூலை 9ஆம் திகதி இந்த நெருக்கடியை கோட்டாபய ராஜபக்ஷ எதிர்கொண்டிருக்கிறார்.**

**அடுத்து வரும் மணி நேரங்களும், நாள்களும் இலங்கையின் எதிர்காலம் பற்றிய விடயத்தில் மிக முக்கியமானவை. எல்லாத் தரப்புக்களும் பொறுப்புணர்வோடும், கட்டுக்கோப்புடனும், சட்டத்தின் நியாயமான ஆட்சியை விரைந்து ஏற்படுத்தும் விதத்திலும் கூட்டாகச் செயற்பட வேண்டும்.**

**பேரினவாதத்தைக் கிளறி, அந்தத் திரைக்குப் பின்னால் நாட்டைச் சூறையாடிய தரப்புகள் இப்போது மக்களின் முன்னால் அம்பலப்பட்டு போயிருக்கின்றன. மக்கள் எப்போதும் முட்டாள்கள் அல்லர். அவர்கள் சாதுவாக அடங்கி இருக்கலாம். ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதை இப்போதாவது அரசியல்வாதிகள் படிக்கும் சூழல் ஏற்பட்டு இருக்கின்றது.**

**வினை விதைத்தவன் வினையை அறுத்துத் தானாக வேண்டும்.**

# எந்த அதிகாரத்துக்குக் கீழே ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது?

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேள்வி

பொலிஸ் மா அதிபரால் மேல் மாகாணத்தின் சில பகுதிகளில் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமைக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் அத்தகைய ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படுவதற்கான ஏற்பாடு இல்லை எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எந்த அதிகாரத்தின் கீழ் அவர் அத்தகைய ஊரடங்குச் சட்டத்தை அறிவித்துள்ளார் எனக் கேட்க விரும்புவதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிரகடனம் என்பது கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடுகளை நசுக்கும் நோக்கம் கொண்டது எனவும் அது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் ஜனநாயகமற்றது எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மைக்கு கடுமையாகப் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை திரும்பப் பெறத் தவறினால் நாட்டுக்கு கடுமையான விளைவுகள் ஏற்படும் எனவும் அந்தச் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மரியாதைக்குரிய அரசியல்வாதியை ஜப்பான் இழந்துள்ளமை வேதனை!

## ஜனாதிபதி கோட்டா அனுதாபம்




ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பானில் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார் என ஜப்பானின் தேசிய ஒளிபரப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் துயர மரணம் ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கிறது. ஜப்பான் மிகவும் மரியாதைக்குரிய அரசியல்வாதியை இழந்துவிட்டது.

அவரது குடும்பத்தினருக்கும், ஜப்பான் மக்களுக்கும் எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். –எனப் பதிவிட்டுள்ளார்.

# மஸ்தான் எம்.பி. மீது மக்கள் குற்றச்சாட்டு!



மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக எரிபொருள் பிரச்சினை நீடித்து வருகின்ற நிலையில் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய காதர் மஸ்தான் இதுவரை எந்த வித நடவடிக்கையும் அல்லது அவசர கலந்துரையாடல்களை மேற்கொண்டு எரிபொருள் பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஏனைய மாவட்டங்களில் எரிபொருள் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான மற்றும் எரிபொருள் பங்கீடு தொடர்பான பல முன்னேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றாலும் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவர் அவற்றில் அக்கறையின்றி செயற்படுகிறார் எனவும் அவர் எரிபொருள் பிரச்சினை தொடங்கிய காலத்தில் இருந்து மன்னார் வருவதை தவிர்த்து வருகிறார் எனவும் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தானுக்கு சொந்தமான பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் காணப்படுகின்றபோது அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூட மக்களுக்கு ஒழுங்கான எரிபொருள் வழங்கப்படுவதில்லை எனவும் நள்ளிரவில் வரும் எரிபொருள் இரவோடு இரவாக விற்பனை செய்யப்படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
சனிக்கிழமை
09.07.2022

# ஷின்சோ அபேவின் உடல் டோக்கியோ வந்தடைந்தது



மேற்கு ஜப்பான் நாரா நகரில் அந்நாட்டின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே துப்பாக்கியால் சுடப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் ஜப்பான் கடற்படையின் முன்னாள் உறுப்பினரான கொலையாளியை பொலிஸார் கைது செய்தனர். மேலும், கொலையாளி பயன்படுத்திய வீட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

நாளை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அபே படுகொலை செய்யப்பட்ட சம்பவம் ஜனநாயகத்திற்கான அச்சுறுத்தல் என நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மேலும், அபேவுக்கான பாதுகாப்பு குறித்தும் கேள்வி எழுந்துள்ளது. இந்நிலையில், முன்னாள் பிரதமரின் மறைவுக்கு நாடு முழுவதும் துக்கம் அனுசரிக்கும் நிலையில் அபேவின் உடல் டோக்கியோவை வந்தடைந்துள்ளது.

## டுவிட்டரை வாங்குவதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்த எலான் மஸ்க்

### வழக்கு தொடரப்போவதாக டுவிட்டர் நிறுவனம் அறிவிப்பு



சமூக வலைத்தள நிறுவனமான டுவிட்டரை வாங்குவதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை எலான் மஸ்க் ரத்து செய்துள்ளார். உலகின் பெரும் பணக்காரரான எலான் மஸ்க் சமூகவலைத்தளமான டுவிட்டரை வாங்க முடிவு செய்தார். இதையடுத்து, 44 பில்லியன் டொலர்களுக்கு டுவிட்டரை எலான் மஸ்கிடம் விற்க டுவிட்டர் நிர்வாகம் கடந்த ஏப்ரல் மாதம் ஒப்பந்தம் செய்தது.

இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு டுவிட்டர் நிறுவன பங்குகளை எலான் மஸ்கிற்கு மாற்றும் பணிகள் நடைபெற்று வந்தன. இதற்கிடையே, டுவிட்டரில் உள்ள போலி கணக்குகள், பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள கணக்குகள் உள்பட சில விவரங்களை தரும்படி டுவிட்டர் நிர்வாக குழுவிடம் எலான் மஸ்க் கோரிக்கை விடுத்தார். ஆனால், இரண்டு மாதங்களாகியும் எலான் மஸ்க் கேட்ட விவரங்களை தர டுவிட்டர் நிறுவனம் மறுத்து வந்தது.

இந்நிலையில், டுவிட்டர் நிறுவனத்தை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுகிறேன் என எலான் மஸ்க் இன்று அதிரடியாக அறிவித்தார். போலி கணக்குகள் கேட்ட தகவல்களை டுவிட்டர் நிறுவனம் தரததாலும், ஒப்பந்தப்படி செயல்படாததாலும் டுவிட்டரை வாங்கும் ஒப்பந்தத்தை கைவிடுகிறேன் என எலான் மஸ்க் அறிவித்துள்ளார்.

டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட நிலையில் அவர் மீது வழக்குத்தொடர உள்ளதாக டுவிட்டர் நிறுவனம் அறிவித்துள்ளது. 44 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்ட டுவிட்டரை வாங்கும் திட்டத்தை எலான் மஸ்க் கைவிட்ட சம்பவம் உலக அளவில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.




## நீதிமன்ற தடையை மீறி கருக்கலைப்புக்கு அனுமதி

### அழுத்தத்துக்கு பணிந்தார் பைடன்

சொந்தக் கட்சி எம்.பிக்களின் நெருக்கடி, போராட்டங்களுக்கு பணிந்து, கருக்கலைப்பை அனுமதிப்பதற்கான நிர்வாக உத்தரவில் கையெ முத்திட அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முடிவு செய்துள்ளார். அமெரிக்காவில் பெண்களுக்கு வழங்கப்பட்டு இருந்த கருக்கலைப்பு உரிமை, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் கடந்த மாதம் 28ம் திகதி ரத்து செய்தது.

இதற்கு அந்நாட்டு பெண்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். மேலும், ஆளும் ஜனநாயக கட்சியை சேர்ந்த எம்.பிக்களும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். உச்ச நீதிமன்றம் தடை விதித்த போதிலும், நிர்வாக ரீதியாக கருக்கலைப்புக்கு அனுமதி அளிக்கும் அதிகாரம், அதிபருக்கு உள்ளது.

இந்நிலையில், போராட்டங்களாலும், சொந்த கட்சியினரின் அழுத்தத்தாலும், கருக்கலைப்புக் கான தடையை நீக்கி, அதற்கு அனுமதி அளிப்ப தற்கான நிர்வாக உத்தரவில் கையெழுத் திட அதி பர் பைடன் முடிவு செய்திருக்கிறார் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஜார்ஜ் பிளாய்ட் கொலை வழக்கு; பொலிஸ் அதிகாரிக்கு 20 ஆண்டுகள் சிறை

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணம் மினியாபொலிஸ் நகரில் கடந்த 2020ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி ஜார்ஜ் பிளாய்ட் என்ற கறுப்பினத்தை சேர்ந்தவரைபொலிஸார் சந்தேகத்தின் பேரில் மடக்கி பிடித்தனர். அப்போது டெரெக் சாவின் என்ற பொலிஸ் அதிகாரி ஜார்ஜ் பிளாய்ட்டை தரையில் தள்ளி அவரது கழுத்தில் கால் முட்டியை வைத்து பலமாக அழுத்தினார். இதில் மூச்சு திணறல் ஏற்பட்டு ஜார்ஜ் பிளாயட் பரிதாபமாக இறந்தார்.

இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைத்தளங்களில் பரவி வைரலானது. ஜார்ஜ் பிளாய்ட்டின் மரணத்துக்கு நீதி கேட்டு அமெரிக்கா முழுவதும் மாபெரும் போராட்டம் வெடித்தது. இனவெறிக்கு எதிராகவும், பொலிஸாரின் காட்டுமிராண்டித்தனத்தை கண்டித்தும் நடந்த இந்த போராட்டங்கள் அமெரிக்காவையே உலுக்கின. இதற்கிடையில் ஜார்ஜ் பிளாய்ட்டின் குடும்பத்தினர் இந்த சம்பவம் தொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். இந்த வழக்கில் டெரெக் சாவின் மீதான கொலை குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து, அவருக்கு 22 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அமெரிக்க கோர்ட்டு கடந்த ஆண்டு ஜூன் மாதம் தீர்ப்பளித்தது. அதை தொடர்ந்து அவர் சிறையில் அடைக்கப்பட்டு தண்டனையை அனுபவித்து வருகிறார்.

இந்த நிலையில், ஜார்ஜ் பிளாய்ட்டின் கைது நடவடிக்கையின் போது பொலிஸ் அதிகாரி டெரெக் சாவின் அடிப்படை மனித உரிமைகளை மீறியதாக வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வந்தது. இந்த வழக்கில் டெரெக் சாவின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, அவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். அதை தொடர்ந்து, இந்த வழக்கில் அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பு அளித்தார்.






காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சுயமரியாதை இயக்கத்தை நோக்கி கலைஞரை ஈர்த்த பனகல் அரசர்–ஸ்டாலின் புகழாரம்



ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் கான உத்தரவுகளைப் பிறப்பித்தவர். பெண்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கி அதிகாரத்தில் பங்கேற்கச் செய்தவர். முதமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட் டுள்ள சமூக வலைத்தள பதிவில் கூறி இருப்பதாவது:–

திராவிட மாடலின் முதல் அத்தியாயத் தைத் தொடங்கி வைத்த நீதிக்கட்சியின் சென்னை மாகாண முதலமைச்சர் பனகல் அரசர் அவர்களின் பிறந்தநாள் இன்று. சமூகநீதிக்கு அடித்தளமிட்ட Communal GOக்கு வழியமைத்தவர். வழிபாட்டு உரிமையைக் காக்கின்ற வகையில் இந்து அறநிலையச் சட்டத்தை நிறைவேற்றியவர். ஒடுக்கப்பட்ட மக்க ளின் உரிமைக்கான உத்தரவுகளைப் பிறப்பித்தவர். பெண்களுக்குப் பிரதிநிதி த்துவம் வழங்கி அதிகாரத்தில் பங்கேற்கச் செய்த வர். உள்கட்டமைப்புகளை மே ம்படுத்தியவர். மருத்துவக் கல்வி–வேலை வாய்ப் புகளில் அனைத்து சமுதாயத்தினரும் பங்கேற்கத் தடையாக இருந்தவற்றைத் தகர்த்தெறிந்தவர். 'பனகல் அரசர்' குறித்த புத்தகம்தான் திருவாரூர் பள்ளியில் தலைவர் கலை ஞருக்கு அரசியல் அரிச்சுவடியாகி சுயமரி யாதை இயக் கத்தை நோக்கி ஈர்த்தது. மக்களாட்சியின் காவலராகச் செயற்கரிய செய்த பனகல் அரசரின் செயல்களைப் போற்றி, எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்குடன் பயணிப் போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருச்சி சுங்கச்சாவடியில் சசிகலா ஆதரவாளர்களுடன் திடீர் மறியல்



தமிழக முன்னாள் முதல்வர் ஜெய லலிதாவின் நெருங்கிய தோழியான சசிகலா நேற்று இரவு 11.45 மணிக்கு விழுப்புரத்தில் இருந்து திருச்சி வழியாக தஞ்சைக்கு திருச்சி–தஞ்சை தேசிய நெடுஞ்சாலை வழியாக சென் றார். அப்போது துவாக்குடியில் உள்ள சுங் கச்சாவடியில் கார் நிறுத்தப்பட்டது.

சசிகலாவின் காருக்கு முன்னாலும், பின் னாலும் மேலும் நான்கு கார்கள் அணிவகுத்து சென்றன. முன்னால் சென்ற கார் ஸ்கேன் செய் யப்பட்டு சென்றதும் பின்னால் சசிகலாவின் கார் சென்றது. அப்போது சசிகலாவின் கார் கண் ணாடியில் சுங்கச் சாவடி ஸ்கேன் தடுப்பு கட்டை தட்டி இடித்துள்ளது. இதையடுத்து சசிகலா தனது காரை சிறிது தூரம் தள்ளி நிறுத்தியுள்ளார்.

உடனே அவரது ஆதரவாளர்களும் சுங்கச் சாவடியில் உள்ள கட்டண நுழைவாயில்களில் ஆங்காங்கே கார்களை அடுத்தடுத்து நிறுத்தி யுள்ளதோடு மறியலிலும் ஈடுபட்டனர். இதனால் தங்களை தாக்கி விடுவார்கள் என்று பயந்து போன சுங்கச்சாவடி பணியாளர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்துள்ளனர். இதற்கிடையே காரில் அமர்ந்தவாறே சசிகலா சுங்கச்சாவடி மேலாளர் உடனடியாக இங்கு வரவேண்டும் என கூறியுள் ளார்.

மேலும் இது போல் தனக்கு 3 முறை இந்த துவாக்குடி டோல்பூத்தில் நடந்துள்ளதாகவும், தன்னை பழிவாங்கும் நோக்கில் இதுபோல் நடத்துகிறார்கள் எனவும் புகார் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து சசிகலா ஆதரவாளர்க ளுடன் சுங்கச்சாவடி ஊழியர்கள் பேச்சு நடத்தி னர். ஆனால் மேலாளர் வரவில்லை என்றால் போராட்டம் தொடரும் என கூறி சாலை மறிய லில் ஈடுபட்டனர். இது குறித்து தகவல் கிடைத் ததும் இரவு ரோந்து பணியில் இருந்த திரு வெறும்பூர் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சம்மந்தப்பட்ட சசிகலா தரப்பி லும் பேச்சுவார்த்தை நடத்தினர். இருந்தும் பலனளிக்காததை தொடர்ந்து சுங்கச்சாவடி மேலாளர் அமர்நாத்ரெட்டி சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு பேச்சில் ஈடுபட்டார். அவர் நடந்த சம்பவத்துக்கு மன்னிப்பு கேட்டார். மேலும் இப்பிரச்சினை குறித்து நீங்கள் வேண்டுமானால் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என பொலிஸார் சசிகலா தரப்பினரிடம் கூறியுள்ள னர்.

அதற்கு ஒப்புக்கொண்ட சசிகலா காரை விட்டு இறங்காமல் காரில் இருந்தவாறு போராட்டத்தில் ஈடுபட்டார். சசிகலா தனது ஆதரவாளர்களுடன் நள்ளிரவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் சுங்கச் சாவடியில் பரபரப்பு ஏற்பட்டது.



## சிப்பாய் எழுச்சி நாள்: கவர்னர் ரவி நாளை வேலூரில் அஞ்சலி செலுத்துகிறார்

ஆங்கிலேயர்களுக்கு எதிரான வேலூர் சிப்பாய் எழுச்சி தினம் ஜூலை 10ம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அன்றைய தினம் வேலூரில் நினைவு கூறும் வகையில் வேலூர் சிப்பாய் எழுச்சி நினைவு தூணில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார். இதற்காக நாளை காலை 7 மணிக்கு கவர்னர் ஆர்.என்.ரவி சென்னையில் இருந்து வேலூர் புறப்பட்டுச் சென்று காலை 10 மணிக்கு அஞ்சலி செலுத்துகிறார். இந்த நிகழ்ச்சியில் கவர்னருடன் தமிழக அமைச்சர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், கலெக்டர் மற்றும் அரசு அதி காரிகள் பங்கேற்கிறார்கள். வேலூரில் அன்றைய தினம் முன் னாள் படை வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்களின் குடும்பத்தி னர் ஆகியோருடன் கவர்னர் ஆர்.என்.ரவி கலந்துரையாடுகிறார்.

## பள்ளிக்கல்வி அதிகாரிகளுடன் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆலோசனை



தமிழகத்தில் உள்ள அரசு, உதவி பெறும் பள்ளிகளில் படிக் கும் மாணவ–மாணவி களுக்கு விலையில்லா பாடப்புத்தகம், நோட்டு புத்தகம் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. 1 முதல் 12ம் வகுப்பு வரை படிக்கும் ஏழை–எளிய மாணவர்கள் இதன் மூலம் பயன் அடைந்து வரு கிறார்கள். 2022–2023–ம் கல்வி ஆண்டிற்கான பாடப்புத் தகங்கள் பள்ளி திறந்து முதல் நாள் முதல் வழங்கும் பணி தொடங்கின. அதற்கு முன் னதாகவே அனைத்து மாவட் டங்களுக்கும் பாடப்புத்தகங்கள் அனுப்பப்பட்டன.

அவை பள்ளிகளுக்கு முதன்மை கல்வி அதிகாரிகள் கண்காணிப்பில் சென்றன. வகுப்புகள் படிப்படியாக தொடங் கியவுடன் மாணவர்க ளுக்கு பள்ளிகள் திறந்து ஒரு மாதம் ஆகியுள்ள நிலையில் பாடப் புத்தகங்கள் மாணவர்களுக்கு முறையாக கிடைக்கவில்லை என்ற புகார்கள் வந்தது. அரசி யல் கட்சி தலைவர்களும் பாடப்புத்தகங்களை முறையாக வழங்க வேண்டும் என்று வலி யுறுத்தினார்கள். இந்த நிலை யில் பாடப்புத்தகங்கள் விநி யோகிக்கப்பட்டது, மாணவர் சேர்க்கை, கல்வி உபகரணங் கள் முறையாக வழங்கப்பட்டது குறித்து ஆய்வு செய்வதற்காக ஆலோசனை கூட்டத்திற்கு பள்ளிக்கல்வி துறை ஏற்பாடு செய்துள்ளது. அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதி காரிகளுடன் ஆய்வு கூட்டம் வருகிற 15ம் திகதி சென்னையில் நடக்கிறது. இதில் பள்ளி கல் வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, செய லாளர் காகர்லா உா, ஆணைய–ாளர்கள் நந்தகுமார் மற்றும் இணை இயக்குனர்கள் கலந்து கொள்கிறார்கள். கூட்டத்தில் சீருடை வினியோகம், எண்ணும் எழுத்தும் திட்டத்தை நடை முறைப்படுத்துதல், துணை தேர்வு, இல்லம் தேடிக் கல்வி தி ட்டம் உள்ளிட்ட பல்வேறு செயல் பாடுகள் குறித்து விவாதிக் கப்படுகிறது. மேலும் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக கடைபிடிக்க வலியு றுத்துவது, மாணவ–மாணவி களுக்கு தொற்று பாதிப்பு ஏற் பட்டால் வகுப்புகளை எவ்வாறு நடத்துவது என்பது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது.

# மத்திய அரசு ஒதுக்கிய நிதியை மாநில அரசுகள் வேறு திட்டங்களுக்கு பயன்படுத்துகின்றன

## மத்திய மந்திரி குற்றச்சாட்டு



ஒதுக்கிய 10 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட திட்டத்திற்கு அதனை பயன்படுத்த வேண்டும். ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் மத்திய பஞ்சாயத்து ராஜ் இணை மந்திரி கபில் மோரேஷ்வர் பாட்டீல் கூறியதாவது:–

ஒவ்வொரு நிதி ஆண்டும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு பல லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்ப டுகிறது. அவற்றை பெறுவதற்குரிய தணிக்கை ஆவணங்களை மாநில அரசுகள் சமர்ப்பிக்காமல் உள்ளதால் தாமதம் ஏற்படுகிறது. இந்த பிரச் சினை ராமநாதபுரத்தில் உள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மத்திய அரசின் திட்டங்கள் எந்த அளவிற்கு செயல்படுத்தப்படுகிறது என்பது குறித்து அதிகாரிகள், பயனாளிகளிடம் கேட்ட றிந்தோம். இது தொடர்பாக கூடுதல் கலெக்டரிடம் விசாரித்து விரைவில் ஆவணங்களை சமர்ப் பிக்க கூறியுள்ளேன். ஊராட்சிகளுக்குரிய நிதி ஒதுக்கிய 10 நாள்களுக்குள் சம்பந்தப்பட்ட திட் டத்திற்கு அதனை பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் மாநில நிதியில் அபராத வட்டி செலுத்தி அதனையும் ஊராட்சிக்கு பயன்படுத்த வேண்டும். மராட்டிய மாநிலத்திற்கு இவ்வாறு அபராதம் விதித்துள்ளோம். ஜல் ஜீவன் திட்டத்தில் வீடுதோறும் குடிநீர் வழங்க வலியுறுத்து கிறோம். ராமநாதபுரத்திற்கு காவிரி நீர் வழங்கவேண்டும். அதனை பெறுவதற்கு முன்பாக நிறைய இடங்களில் வெறும் குழாய் மட் டும் பதித்துள்ளனர். இதுதொடர்பாக அறிக்கை கேட்டுள்ளேன். மத்திய அரசு மாநிலங்களுக்கு நிறைய நிதி ஒதுக்கியுள்ளது. அதனை மாநில அரசுகள் வேறு திட்டங்களுக்கு பயன்படுத்துகின் றன. தமிழகத்தில் அந்த விவரங்களை அனுப்ப மாவட்ட நிர்வாகங்களிடம் கேட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

அப்போது முன்னாள் மத்திய மந்திரி பொன்.ராதாகிருஷ்ணன், பா.ஜனதா மாநில பொதுச்செயலாளர் பொன்.கணபதி, ராம நாதபுரம் மாவட்ட தலைவர் கதிரவன், பொருளாளர் தரணி முருகேசன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



# சைக்கிள்கள் திருட்டு ஏறாவூரில் அதிகரிப்பு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் கடந்த ஒருவாரத்தில் 10 சைக்கிள்கள் திருட்டுபோயுள்ளன எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக மக்கள் மீண்டும் சைக்கிள் பாவனைக்குத் திரும்பியுள்ளமையையடுத்து தற்போது ஒரு சைக்கிள் 50 ஆயிரம் ரூபா வரை விலைக்கு விற்பனை செய்யப் படுகின்றது.

இந்த நிலையில் சைக்கிள்களை பொதுமக்கள் வர்த்தகநிலையங்கள், சந்தை, வங்கிகள் போன்ற பொது இடங்களுக்கு முன்னால் நிறுத்திவிட்டு அங்கு சென்று தமது தேவையைப் பூர்த்தி செய்துவிட்டுதிரும்பி வரும் போது பூட்டி விடப்பட்ட சைக்கிள்கள் திருட்டுபோயுள்ளன என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

தற்போது தினமும் சராசரி இரு சைக்கிள்கள் வீதம் திருட்டுப் போயுள்ளன எனப் பொதுமக்கள் முறைப்பாடு செய்கின்றனர். ஆகையால், தற்போது சைக்கிள் திருடும் கள்வர்கள் அதிகரித்துள்ளனர். எனவே, இந்தத் திருடர்களிடமிருந்து பொதுமக்கள் தமது சைக்கிள்களைப் கவனமாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் எனப் பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

# வளத்தாப்பிட்டியில் தீர்த்தோற்சவம்



அம்பாறை மாவட்டம் வளத்தாப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க பிள்ளையார் ஆலய ஆனித் திங்கள் அலங்கார திருவிழாவின் இறுதி நாள் தீர்த்தோற்சவம் நேற்று கடந்த புதன்கிழமை ஆலய பிரதம குரு கணபூஜா துரந்தர் சிவஸ்ரீ கரனிஸ்வரக் குருக்கள் தலைமையில் சிறப்பாக இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். (படம்: காரைதீவு நிருபர் சகா)

# 'களுவாஞ்சிக்குடியில் நூல் வெளியீடு!

(க.கிருபாகரன்)




பௌர்ணமி கலை, இலக்கியத் தொடரின் 44 ஆவது நிகழ்வாக மகுடம் கலை இலக்கிய வட்டம் நடத்தும் களுவாஞ்சியூர் அநோஜா பவளேந்திரனின் 'சுடுசோறு'– சிறுகதைகள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி (புதன்கிழமை) களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வு பெற்ற கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் சி.மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு கோறளைப்பற்று மேற்குப் பிரதேச செயலாளர் வெ.தவராசா பிரதம விருந்தினராகவும், கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வு நிலைப் பேராசிரியர் செ.யோகராசா சிறப்பு விருந்தினராகவும், களுவாஞ்சிக்குடி கிராமத் தலைவரும், ஆலய பரிபாலன சபைத் தலைவருமான அ.கந்தவேள், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபைத் தலைவரும், கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான க.மதிசீலன், பட்டிருப்புக் கல்வி வலயத் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.நேசகஜேந்திரன், ஓய்வு நிலை தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.குணசேகரம், மண்டூர் – 14 சக்தி மகா வித்தியாலய அதிபர் வ.சௌஜன், மகிழூர் சரஸ்வதி மகா வித்தியாலய அதிபர் சா.பத்மகுமார், பட்டிருப்புக் கல்வி வலய சேவைக்கால பயிற்சி ஆலோசகர் திருமதி விஜயலெட்சுமி செல்வராசா மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியை சி.ரஜனி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நூலின் முதல் பிரதியை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவரும், கொடை வள்ளலுமான சைவப்புலவர் வி. றஞ்சிதமூர்த்தி பெற்றுக் கொள்வார்.

இந்நூலுக்கான வெளியீட்டுரையை மகுடம் பதிப்பகத்தின் இயக்குநர் மகுடம் வி.மைக்கல் கொலினும், நூல் நயவுரையை கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் சிரேஷ்ட விரிவுரையாளர் கந்தசாமி மேகனதாசனும், ஏற்புரையை நூலாசிரியை களுவாஞ்சியூர் அனோஜா பவளேந்திரனும் நிகழ்த்தவுள்ளனர்.

# இயந்திரப் பாதையில் பாதயாத்திரீகர்கள்







யாழ்ப்பாணம் – கதிர்காமம் பாதையாத்திரைக்குழுவினர் நேற்று வெள்ளிக்கிழமை களுவாஞ்சிக்குடியிலிருந்து குருமண்வெளி இயந்திரப்பாதை ஊடாக வரலாற்று பிரசித்தி பெற்ற ஸ்ரீ மண்டூர் முருகன் ஆலயத்தை சென்றடைந்தனர். இன்று சனிக்கிழமை அவர்கள் காரைதீவை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. பாதயாத்திரீகர்கள் பாதையில் பயணிக்கின்ற பொழுது. (படம்: காரைதீவு நிருபர் சகா)

# கர்ப்பிணிப் பெண் அரச உத்தியோகத்தர்களை அருகிலுள்ள சேவை நிலையத்துக்கு நியமிக்குக!

## பெண் எம்.பிக்கள் கோரிக்கை

எரிபொருள் நெருக்கடியால் சிரமத்துக்குள்ளாகும் கர்ப்பிணி அரச உத்தியோகத்தர்களை அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள வேறொரு சேவை நிலையத்தில் நியமிக்கும் முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கையின் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, அரச நிர்வாக அமைச்சர் தினேஷ் குணவர்தனவுக்கு கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அவ்வாறு பணியமர்த் தப்படுவதில் சிரமம் உள்ள கர்ப்பிணி அலுவலர்கள், பணிக்கு இடையூறு ஏற்படாத வகையில் வீட்டிலிருந்த படியே இணையத்தில் பணிபுரிய வாய்ப்பளிக்க வேண் டும் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அரச அலுவலகங்களுக்கு அதிகாரிகளை வரவழைப்பதைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ளது.

பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பீட்டின் படி, 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தி யோகத்தர்களை அவர்கள் வசிக்கும் இடத்துக்கு அருகில் உள்ள வேறு சேவை நிலையத்துக்கு நியமிக்கும் விடயம் கர்ப்பிணி அரச உத்தியோகத்தர்களுக்கு கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், இதனை தனியார் துறைக்கு பிரயோகிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தனது கடிதத்தில் கோரியுள்ளார்.

# கிளிநொச்சியில் கைப்பற்றப்பட்ட 6,800 லீற்றர் டீசல் அத்தியாவசிய சேவைக்காக மாவட்ட செயலரிடம்!




தனிநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 6 ஆயிரத்து 800 லீற்றர் டீசல் அத்தியாவசிய சேவைகளுக்காக மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது, கிளிநொச்சி நீதிமன்றால் மேற்படி எரிபொருள் நேற்று (வெள்ளிக்கிழமை) உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி கரடிப்போக்கு பகுதியில் கடந்த வாரம் சட்டத்துக்கு முரணாக கையிருப்பில் வைத்திருந்த டீசல், பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெயே இவ்வாறு நீதிமன்றால் விடுவிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளுக்காகப் பயன்படுத்த கையளிக்கப்பட்டன.

அதற்கு அமைவாக நேற்று 12.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் உள்ளிட்ட குழுவினர் நீதிமன்ற பதிவாளரை சந்தித்து எரிபொருள்களைப் பெற்றுக்கொண்டனர். இந்த விடயம் தொடர்பில் ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிடுகையில் –

எமக்கு கிடைக்கப்பெற்ற எரிபொருளில் 6 ஆயிரத்து 800 லீற்றர் டீசலாக காணப்படுகின்றது. அதனை நீதிமன்றம் மாவட்ட செயலகத்துக்கு கையளித்துள்ளது. அதன் பிரகாரம் குறித்த எரிபொருளை கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கையளித்து அவற்றை அத்தியாவசிய சேவைகளுக்காகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

# யாழ்.–கிளிநொச்சி ரயில் சேவை வெளியானது நேர அட்டவணை!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க விருக்கும் விசேட ரயில் சேவைக்கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, காலை 6 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், 6.40 மணிக்கு யாழ். ரயில் நிலையத்திலிருந்தும், 7 மணிக்கு சாவகச்சேரியிலிருந்தும், 7.12 மணிக்கு கொடிகாமத்திலிருந்தும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கும், கிளிநொச்சியை 7.56 மணிக்கும், அறிவியல் நகர் ரயில் நிலையத்தை 8.05 மணிக்கும் வந்தடைந்து 8.11 மணிக்கு முறிகண்டியை அடையும்.

காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில், மாவிட்டபுரத்திலிருந்து 6.05 மணிக்கும், தெல்லிப்பழையிலிருந்து 6.09 மணிக்கும், மல்லாகத்திலிருந்து 6.14 மணிக்கும், சுன்னாகத்திலிருந்து 6.18 மணிக்கும், இணுவிலிலிருந்து 6.22 மணிக்கும், கோண்டாவிலிருந்து 6.27 மணிக்கும், கொக்குவிலிருந்து 6.31 மணிக்கும் புறப்பட்டு 6.35 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே, புங்கன்குளம் 6.44 மணிக்கும், நாவற்குழி 6.50 மணிக்கும், தனங்கிளப்பு 6.54 மணிக்கும், சாவகச்சேரி 7 மணிக்கும், சங்கத்தானை 7.03 மணிக்கும், மீசாலை 7.07 மணிக்கும், கொடிகாமம் 7.12 மணிக்கும், மிருசுவில் 7.14 மணிக்கும், எழுதுமட்டுவாள் 7.21 மணிக்கும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கும் வந்தடையும். அங்கிருந்து ஆனையிறவு 7.42 மணிக்கும், பரந்தன் 7.50 மணிக்கும் வந்தடைந்து கிளிநொச்சிக்கு 7.56 மணிக்கும் வந்தடையும்.

மீண்டும், காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்த ரயில் பளையிலிருந்து 10.31 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 10.48 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 11 மணிக்கும் புறப்பட்டு 11.20 மணிக்கும் யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், யாழ்ப்பாணத்திலிருந்து 2.39 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 2.59 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 3.11 மணிக்கும் புறப்பட்டு, பளையை 3.38 மணிக்கும், கிளிநொச்சியை 3.56 மணிக்கும் வந்தடைந்து, முறிகண்டியை 4.10 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் முறிகண்டியிலிருந்து 4.40 மணிக்கும் புறப்படும் இந்த ரயில் அறிவியல்நகரை 4.46 மணிக்கும் வந்தடைந்து, கிளிநொச்சியிலிருந்து 5 மணிக்கு புறப்பட்டு, பரந்தனிலிருந்து 5.06 மணிக்கும், பளையிலிருந்து 5.30 மணிக்கும் புறப்பட்டு 6.44 மணிக்கும் யாழ்ப்பாணம் வந்தடைந்து 7.20 மணிக்கும் காங்கேசனை அடையும்.

இடையில், பரந்தனிலிருந்து 5.04 மணிக்கும், ஆனையிறவிலிருந்து 5.14 மணிக்கும் ரயில் புறப்படும்.




# இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா ஏன் எந்தவித அழுத்தமும் கொடுக்கவில்லை?

## இரா.துரைரெட்ணம் கேள்வி

இந்திய அரசாங்கம் இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கான தீர்வு விடயத்திலும் அதிகாரப்பரவலாக்கல் விடயத்திலும் எந்தவித அழுத்தத்தையும் முன்வைக்காதமை வேதனையான விடயம் என முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் தலைவருமான இரா.துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.

மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பல உதவிகளை இலங்கை மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இனமதபேதம் பாராமல் இந்திய அரசாங்கம் வழங்கிவருவது பாராட்டுக்குரியதென்றாலும் வடக்கைப்பொறுத்தவரையில் இந்திய அரசாங்கம் கூடுதலான உதவிகளையும் கிழக்கில் என்ன உதவி செய்துள்ளார்கள் என்று கேள்விகேட்கக்கூடிய சூழ்நிலையுமே காணப்படுகின்றது.

இனப்பிரச்சினை தொடர்பாக ஓர் அழுத்தத்தை இலங்கை அரசாங்கத்துக்கு ஏன் இந்திய அரசாங்கம் வழங்கவில்லையென்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

தமது ஆட்சியில் மக்கள் கடும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு இந்த ஆட்சியில் உள்ளவர்கள் பதவி விலகுவதே இன்றைய சூழலுக்கு ஏற்றவிடயமாகும்.



# பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவரிடம் விசாரணை செய்க!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்வைத்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கம் ஊடாகவே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பொது மக்களை தவறாக வழிநடத்தியுள்ளாரா என கோப் குழு விசாரிக்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அத்துடன், தன்னையும் விசாரணைக்கு உட்படுத்துமாறும் அவர் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2022இல் வெளியிடப்பெற்றது.